**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **55**

| | | | |
|---|---|---|---|
| Name: | முஸ்தப்பா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A6, A11, A15, A17, A24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.05.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் மரைக்காயர் பள்ளி வாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் எல்.ஆர்.எஸ்.பாளையத்தில் ஜெ.எம் என்ற பெயரில் அரிசிக்கடை வைத்து நடத்தி வந்தேன். நான் கடந்த 15 வருடங்களுக்கு முன் சம்பவ தினத்தன்று எனது கடையை திறக்க வந்தபோது இரண்டு தரப்பினருக்கும் பிரச்சனை என்று கேள்விப்பட்டு கடையை திறக்காமல் ஓடிவிட்டேன். கடையின் வெளியே ஓடியவர்கள் ஆயுதங்கள் எதுவும் வைத்திருந்தனரா என்று நான் பார்க்கவில்லை. கூலக்கடை பஜாரில் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். குமார் பாண்டி வகையறாவுக்கும் வேறு சிலருக்கும் தகராறு என கேள்விப்பட்டேன். இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன்.. இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும்

இந்துக்கள் என்றும் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி நான் கடையை திறந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தபோது அன்று காலை 10.15 மணிக்கு கூலக்கடை பஜார் விலக்கில் வைத்து இரண்டுகோஷ்டியினர் மோதிக் கொண்டார்கள் என்றும் அதனால் ஒரே சப்தமாக இருநததால் நான் வெளியே வந்து பார்த்தேன் என்றும் அரிவாளை வைத்து ஒருவரை ஒருவர் வெட்டி வெட்டுக்காயத்துடன் ஓடினார்கள் என்றும் ஆனால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றும் ரோட்டில் வந்தவர்கள் பீதியில் தெற்கு வடக்காக ஓடினார்கள் என்றும் எல்லோரும் கடையை அடைத்ததால் நானும் கடையை அடைத்து விட்டு போய் விட்டேன் என்றும் சம்பவத்தில் இரண்டு பக்கமும் மூன்று மூன்று நபர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் அதில் சிலருக்கு வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளையும் காயம்பட்டவர்களையும் தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**